அழகுபட்டி ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ஆணை பிறப்பிப்பவர் : திருமதி. K. அருணாதேவி

ந.க.எண். 01 / 2024 / அ.ஊ

நாள். 05.04.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகரித்தல் – திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் – அழகுபட்டி ஊராட்சி/கிராமம் – நில அளவு எண். 23/4இல் 2800சதுர மீட்டர் (அ) 0.69ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை எண்கள் 1 முதல் 15 மனைகள் (மனுதாரர் உபயோகம்–1 உட்பட) மனைகளாகப் பிரிக்கப்பட்டு துணைஇயக்குநர்/ உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் – தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.K.வினோத்குமார் மற்றும் லோகநாதன், 61, மேற்கு ராமநாதபுரம், திண்டுக்கல், நாள். 27.12.2023
2. துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், விண்ணப்ப எண்.KCWQBTGR நாள் : 27.12.2023
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020 போ. நாள்.24.12.2020
4. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.06.2004
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019, மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020
7. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3), நாள் : 23.09.2020
8. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.09.12.2020
9. அரசு கடிதம் எண். 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் : 30.08.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள். 08.09.2017
11. துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், விண்ணப்ப எண்.JCWQBTGR/2024/TCP, நாள்: 22.02.2024
12. அசல் தானபத்திரம் எண்.1183/2024 நாள் :16.02.2024 மற்றும் TANGEDCO அசல் தானபத்திரம் எண்.1184/2024 நாள்.16.02.2024
13. மனுதாரர் கட்டணங்களை அரசு தலைப்பில் செலுத்திய நாள் : 05.04.2024
14. ஊராட்சி மன்ற தீர்மான எண். 55 நாள்: 05.03.2024

***

உத்திரவு

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், அழகுபட்டி ஊராட்சி / கிராமம், நில அளவு எண். 23/4இல் 2800சதுர மீட்டர் (அ) 0.69ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை எண்கள் 1 முதல் 15 மனைகள் (மனுதாரர் உபயோகம்– 1 உட்பட) மனைகளாகப் பிரிக்கப்பட்டு வரைபடத்திற்கு SWP/DTCP/

DINDIGUL/ LAYOUT NO : 25/2024 என எண்ணிடப்பட்டு, பார்வை 11–ல் கண்டவாறு ஒப்புதல் வரப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 14 மனைகள் + மனுதாரர் உபயோகம் 0.69ஏக்கர் (2800ச.மீ.) மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டணங்களை மொத்த பரப்பில் (2800ச.மீ.) உள்ளாட்சிக்கு தானம் மற்றும் சாலை பரப்பு மற்றும் இ.பிக்கு ஒப்படைக்கப்பட்டது (554.87++224.51ச.மீ+11.22ச.மீ+11.22ச.மீ) மொத்தம் 801.82 நீங்கலாக மீதமுள்ள மனைகளின் பரப்பு 1998.18ச.மீ.க்கு ரூ.30/– வீதம் 1998.18ச.மீ. x ரூ.30/ = ரூ.59,945/– மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.1000/–ஐ அழகுபட்டி ஊராட்சி கணக்கில் நாள் : – –2024 அன்று (பல்வகை ரசீது எண்:22.3.2.T.1 நாள்:05.04.2024) செலுத்தியுள்ளார். எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனை எண்கள் 1 முதல் 15 (மனுதாரர் உபயோகம் உட்பட) அழகுபட்டி ஊராட்சி மன்ற தீர்மான எண்55நாள்.05.03.24–ன்அடிப்படையில் அங்கீகரித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. நகர் ஊரமைப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு வியாபிக்கின்ற வகையில் ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறுகள், கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத, ஆனால் அதைச்சார்ந்த கட்டிடம் மட்டும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒருபாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்களுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படவேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவின் நுழைவுவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

தலைவர் / செயல் அலுவலர்
அழகுபட்டி ஊராட்சி

தலைவர்
அழகுபட்டி ஊராட்சி.

இணைப்பு :
அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்.

பெறுநர்
திரு.K.வினோத்குமார், K. லோகநாதன்,
61, மேற்கு ராமநாதபுரம்,
திண்டுக்கல் மாவட்டம் – 624 001.

நகல் :
திண்டுக்கல் ஜாயிண்ட்–2 சார்பதிவு அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம்.